## படல்கும்புற பிரதேச சபை - 2023

------------------------------------------------------------

## 1. <u>நிதிக் கூற்றுக்கள்</u>

### 1.1 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயம்</u>

படல்கும்புற பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு படல்கும்புற பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றம் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை</u>

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம் பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே

விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயலாற்றல் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமான ரூபா 3,526,237 ஆக இருந்த போதும் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 6,859,186 ஆக 3,332,949 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டு நிதி கூற்றுகள் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | சரியான மீதிகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைக்குரிய வெகரகொட மற்றும் மீகஹயாய சுடலை காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது அனைத்து காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு செய்யப்படுவதாக | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களும் இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | வாரச்சந்தையின் பல நோக்கு கட்டிடத்துக்காக முத்தரப்பு மின்சாரம் பெற்றுக் கொள்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 529,891 ஆன பெறுமதி மூலதனம் ஆக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | சரியான மீதிகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டின் ஆதனங்கள் கையேற்றல் மற்றும் மேம்படுத்தலுக்காக செலவிடப்பட்ட ரூபா 2,918,412 ஆன மூலதனச் | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | அனைத்து செலவினங்களும் சரியாக இனங்கானப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | செலவினம் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | | கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் பிரதேச சபைக்கு நன்கொடையாக கிடைத்த மரம் கிளிக்கும் இயந்திரம், பிளாஸ்டிக் நீர்தாங்கி மற்றும் Tablet computer (lenowa) ஆகிய சொத்துக்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக | சபைக்கு கிடைக்கும் அனைத்து சொத்துக்களின் பெறுமதியும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டின் நூலகத்திற்காக நன்கொடையாக கிடைத்த 74 புத்தகங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதாக | நூலக புத்தகங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (எ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 6,327,295 ஆக இருந்த போதும் அது ரூபா 6,095,465 என ரூபா 231,830 எனக் குறைத்து நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியான மீதிகளை நிதி கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டுக்குரிய நிலையான வைப்புகளுக்காக பெறவேண்டிய ரூபா 66,879 ஆன வட்டி வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்களும் ,னங்க காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் சுகாதார சேவை பிரிவின் சம்பளம் மற்றும் செலவினம் ரூபா 196,033 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியான மீதிகளை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மீளாய்வாண்டின் நலன்புரி சேவைகளுக்காக கிடைத்த ரூபா 991,057 ஆன மூலதன மானியம் மற்றும் அதிலிருந்து செலவிடப்பட்ட மூலதன செலவினம் நிதி செயற்பாடு தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியான மீதிகளை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஔ) | பிரதேச சபைக்கு எதிராக வெளித் தரப்பினரால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதாக | நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவதற்கு தாக்கமளித்த விடயங்கள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு பெறுமதி மதிப்பிடல் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இருப்பு பெறுமதியிடல் கொள்கை வெளிப்படுத்தப்படுவதாக | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 <u>இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்</u>

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| வைப்பு பதிவேட்டின் பிரகாரம் உடன்படிக்கை பிணை வைப்பு ரூபா 1,759,638 ஆக இருந்த போதும் ரூபா 1,831,688 ஆக காண்பித்த காரணத்தினால் ரூபா 72,050 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்குவதாக | நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்கு மீதிகள் மற்றும் அட்டவணைகளுடன் இணங்க வேண்டும். |

### 1.6.3 <u>கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 457,771,158 கூட்டுப்பெறுமதியான 04 சொத்து விடயங்கள் தொடர்பாக துறைசார் மதிப்பீட்டு அறிக்கை உரித்து உறுதிகள் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது | 2024 ஆம் ஆண்டின் போது தொழில் சார் மதிப்பீடொன்றை மேற்கொண்டு சரியான பெறுமதியை சரியாக பதிவேடுகளில் உட்படுத்தி நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்ட கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 <u>இணக்கமின்மைகள்</u>

<u>**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**</u>

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) 19(xii) ஆம் பிரிவு | பிரதேச சபைக்கு உரிய 14 கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக | சபையில் ஆவணங்களை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 24(1) ஆம் பிரிவு | வீதிகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 254 வீதிகள் வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் வீதி பதிவேட்டை நாளதுவரை யாக்குவதாற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | எதிர்காலத்தில் இந்நடவடிக்கை களை விரைவில் மேற்கொள்வதாக | வீதிகள் பதிவேடுகளை நாளது வரையாக பேணிச் செல்ல வேண்டியதுடன் அதில் உள்ள வீதிகளை வர்த்தமானியில் வெளியிட வேண்டும் |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 83(1) ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த 116 கட்டிட திட்டங்களைப் பரீட்சித்து இணக்க சான்றிதழ்கள் வழங்கப்படாமை கரணமாக அதிகார பிரதேசத்தின் கட்டிட நிர்மாணங்கள் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர் காலத்தில் இந்நடவடிக்கைகளை சீராக்குவதாக | அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படு கின்ற நிர்மாணங்கள் ஒழுங்குபடுத்தலுக் கு உட்பட வேண்டும். ங |
| (இ) | 2014 திசெம்பர் 05 ஆந் திகதிய 9/ஆ/4 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் சட்டம் மற்றும் சமாதான கல்வி மாகாண காணி கலாச்சார அலுவல்கள் சமூக நலன்கள் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாண அமைச்சு செயலாளரின் கடிதத்தின் 03 ஆம் பந்தி | அமைச்சு செயலாளரின் முன் அங்கீகாரம் ஒன்று இல்லாமல் கெப் வண்டி ஒன்றை திருத்துவதற்காக ரூபா 867,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபத்திடமி ருந்து பெற்ற பணத்திலிருந்தே. குறித்த கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட தாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | விதி விளக்குகள் பதிவேட்டின் பிரகாரம் பிரதேசத்தில் 525 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு இருந்த போதும் வீதிகளுக்கு வெளிச்சமுட்டுதல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்க வில்லை | உள்ளுராட்சி மன்ற ஆணையாளரிடமிரு ந்து ஆலோசணை கேட்டு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட் டுள்ளதுடன் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் எமது சபையால் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,397,832 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,409,424 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | <br>பட்டியலிடப்பட்ட வருமானம் | <br>சேகரிக்கப்பட்ட வருமானம் | <br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | <br>பட்டியலிடப்பட்ட வருமானம் | <br>சேகரிக்கப்பட்ட வருமானம் | <br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,250,274 | 3,404,891 | 2,341,343 | 1,063,549 | 1,150,200 | 911,857 | 718,998 | 192,859 |
| (ii) | வாடகை | 3,949,600 | 3,876,782 | 3,707,307 | 169,475 | 3,055,200 | 3,695,759 | 3,478,159 | 217,600 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 730,200 | 444,150 | 444,150 | - | 736,000 | 498,975 | 498,975 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 22,250,000 | 17,891,606 | 7,322,119 | 10,569,487 | 10,762,500 | 6,839562 | 3,742,510 | 3,097,052 |
| | | 30,180,074 | 25,617,429 | 13,814,919 | 11,802,511 | 15,703,900 | 11,946,153 | 8,438,642 | 3,507,511 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரி மற்றும் வரி**<br>மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 2,797,756 ஆன வீதவரி வருமானத்தில் ரூபா 1,001,196 அதாவது 36 சதவீத அளவொன்று திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட்டு வருவதாக | ஆண்டுக்குரிய அனைத்து வருமானத்தை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 506,825 ஆன நிலுவை வீதவரி வருமானத்தில் ஆண்டில் ரூபா 272,441 ஆன அதாவது 54 ஆன அளவு அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும் |
| (இ) | படல்கும்புற வாரச்சந்தை குத்தகைக்கு வழங்கியமைக்காக முன்னைய ஆண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 19,014 ஆன வருமானம் மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும் |

**வாடகை**

| | | |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 1,278,600 ஆன கடை வாடகை வருமானத்தில் ரூபா 58,300 தொகை திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 307,400 ஆன நிலுவை கடை வாடகை வருமானத்தில் இருந்து ஆண்டில் ரூபா 253,400 அதாவது 82 சதவீதம் அளவில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்நிலுவை தொகை கொவிட் தொற்று காலங்களில் அறவிட முடியாத வாடகை வருமானமாக இருந்ததுடன் அறவிடப்படாத வாடகை வருமானமாக இருந்ததுடன் வருமானத்தில் இருந்துபதிவழிப்பதற்கு ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| வியாபார அனுமதிப்பத்திர வரி மற்றும் கைத்தொழில் வரி அறவிடப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக அனைத்து வியாபார நிறுவனங்களும் மேவுகை செய்யப்படக் கூடிய வகையில் கணிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டிற்குரியதாக இச்செயற்பாடுகளை சீராக்குவதாக | சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்படும் வியாபாரங்கள் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் |

**சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள்**

| | | |
|---|---|---|
| சிறிய அளவு கைத்தொழில் செயற்பாடுகளுக்காக சுற்றாடல் அனுமதி பத்திரங்கள் வழங்குவது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் சபையால் வழங்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான வழிகாட்டலின் 2.5.2 பிரிவின் பிரகாரம்சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் வெளிக்கள பரிசோதனை கட்டங்களாக | வங்கி கணக்கு திறக்கப்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்படுகின்ற பணத்தையும் செலவு வைப்பதற்காக கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | | |
| | **ஏனைய** | | |
| (அ) | அதிகாரப் பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த 3 தொலைபேசி தொடர்பாடல் கோபுரங்களுக்குரிய 2022-2023 காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை வியாபார வரி ரூபா 36,000 தொகை 2023 திசெம்பர் 31 ஆம் தேதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை கொடுப்பனவு செவய்யுமாறு நிறுவனத்தினால் அவ்வப்போது அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 02 நீர் முன்மொவிவு திட்டங்களின் 306 நீர் பாவனையளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிவிடப்பட வேண்டிய ரூபா 284,016 ஆன நிலுவை நீக் கட்டணத்தை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை விரைவில் அறவிடுவதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட வேண்டும் |
| (இ) | 2017/2020 காலப் பகுதிக்கு உரியதாக அறவிடப்பட வேண்டிய நிலுவை இயந்திர வாடகை வருமானம் ரூபா 205,470 தொகையை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை விரைவில் அறவிடுவதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட வேண்டும் |
| (ஊ) | நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,814,635 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 6,095,465 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பெற்றுக் கொள்வதற்கு. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகையை விரைவில் அறவிடுவதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட வேண்டும் |

## 3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

### 3.1 <u>சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேறறுதல்</u>

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டிய கைத்தொழில்களை இனங் காண்பதற்காக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக | சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்களின் செல்லுபடிக் காலம் கடந்திருந்த 11 கைத்தொழில்களின் அனுமதி பத்திரங்கள் புதுப்பிக்கப்படாமல் இருந்ததுடன் 2023 ஆம் ஆண்டில் வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரிகளை செலுத்திய 27 நிறுவனங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிபத்திரத்தை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | இந் நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக | சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்களை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |

## 3.2 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 05 நூலகங்களில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டிருந்த ரூபா 79,588 கிரையமான 547 நூலக புத்தகங்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மீளளிக்கப்பட்டு இருக்கவில்லை. | இதற்காக ஆலோசனை குழு ஒன்று நியமிக்கப்பட்டு தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | எடுத்துச் செல்லப்பட்ட புத்தகங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வில் 10 அலுமினியம் ஏணிகள் மற்றும் 2000 லீட்டர் பிளாஸ்டிக் நீர்ச்சாங்கி என்பன | இது தொடர்பாக புலனாய்வொன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங் காணப்பட்டு நட்டங்கள் |

| | | |
|---|---|---|
| குறைபாட்டு இனம் காணப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வருகிறோம் உத்தியோகத்தர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | | அறவிடப்பட வேண்டும் |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நக்கல வாரச்சந்தை மற்றும் 05 கடைகள் மற்றும் இங்குறுகடுவ வாரச்சந்தையை மீளாய்வாண்டின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டுக்குரிய குத்தகைக்காக மூன்று முறை பெறுகை செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக விண்ணப்பதாரரி ஒருவரேனும் முன் வந்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான ஆதனங்களிலிருந்து வருமானங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 78 காணிகள் அளவீடு செய்யப்படாதவர்களுடன் 95 காணிகளின் சட்டபூர்வமான உரித்தை கையேக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் சட்ட ரீதியான உரித்தை கையேற்க வேண்டும். |
| (ஆ) சபைக்கு சொந்தமான கெப் வண்டி வண்டி 2023 மே 12 ஆம் திகதிய ஓட்டக் குறிப்பின் பிரகாரம் மைலோ மீட்டர் மற்றும் வானத்தின் மைலோ மீட்டருக்கு இடையே 1519 கிலோமீட்டர் வேறுபாடு | இது தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொள்வதற்காக உதவி உள்ளுராட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக | பொறுப்பான தரப்பினர்கள் இனம் காணப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டதுடன் முறையான பரிசோதனை ஒன்று 2023 நவம்பர் 30 ஆம் வரை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | | |
| (இ) | பிரதேச சபையால் 2017 - 2023 காலப்பகுதிக்குரிய கடியன்தலாவ திருவாணா கனிய பணிவுடன் கூடிய காணியை கையேற்பதற்கும் கணிய அகழ்வு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக ரூபாய் 210,760 ஆன செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் நவம்பர் 30 ஆம் திகதி வரையிலும் குறித்த காணி கைகயேற்க்கப்படாதிருந்தருடன் திருவாணா அகழ்வதற்குரிய சுற்றாடல் அனுமதி பத்திரம் மற்றும் அகழ்வு தொடர்பான அனுமதி பத்திரமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது சுற்றாடல் அனுமதிப்பத்திரம் மற்றும் கணிய அகழ்வு அனுமதித்திரத்தை பெற்றுக் கொள்ள விண்ணப்பித்துள்ளதாக | சபைக்கு சொந்தமான பணத்தை உயர் செயற்திறனாகவும் வினைத் திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | படல்கும்புற கமநல அபிவிருத்தி சபையிடமிருந்து 2017 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த 04 சக்கர உழவு இயந்திரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் எவ்வித பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிசங்க தேசிய பாடசாலையில் தொழில்நுட்ப விடயங்களை படிக்கும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக இந்த உழவு இயந்திரத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபைக்கு சொந்தமான சொத்துக்களிலிருந்து செயல் திறனாக பயன்பாட்டினை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் (LDSP) நிதி ஏற்பாட்டின் பேரில் ரூபா 54,654,409 ஆன செலவு செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த வாரச்சந்தை | திட்டத்தில் குறைபாடு காணப்பட்’டமையால் திட்டக் குழு அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கு தாமதம் ஏற்பட்டது. இப்போது | கட்டிட திட்டத்திற்காக கட்டிட திட்டக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் |

| | | |
|---|---|---|
| மற்றும் பல்நோக்கு கட்டிடத்தில் உரிய கட்டிடத் திட்டம் 2023 நவம்பர் 30 ஆம் திகதி வரையில் அங்கீகரித்துக் கொள்ளப்படாது இருந்ததுடன் மீளாய்வாணண்டின் இறுதி வரையில் பல்நோக்கு கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு மாதம் 6 மாதங்கள் கடந்து இருந்த போதும் அதில் தளத்தில் பல இடங்களில் வெடிப்பு காணப்பட்டதுடன் மற்றும் கட்டிடத்தின் சுவர்களில் 20 இடங்களில் 46.13 மீட்டர் நீளமான வெடிப்புகள் காணப்பட்டன | அங்கீகாரத்திற்குாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பு வைக்கப்பட்டுள்ளதாகவும் இவ்வெடிப்பு வெப்பம் காரணமாக உருவாகும் internalcracks என தொழில்நுட்ப குழு மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | கொள்ள வேஷண்டியதுடன் நிர்மாண வேலைகள் முறையாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |

### 3.6 <u>மனித வள முகாமைத்துவம்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ˙ திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 4பதவிகளுக்குரிய 6 ஊழியர்களின் வெற்றிடங்கள் 03 பதவிகளில் 06 உத்தியோகத்தர்களுக்கு மிகை காணப்பட்டது. | விடுக்கப்பட்டுள்ளதாகவும் கடந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட புதிய ஆட்சேர்ப்பு மற்றும் வருடாந்த இடமாற்றங்களினால் இந்நிலைமை உருவாகியதாக | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்ப வேண்டியதுடன் மிகை பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்ள வேண்டும் |

## 4. <u>கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்</u>

### 4.1 <u>உள்ளக கணக்காய்வு</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண் டிற்கான சபையில் உள்ளக கணக்காய்வு வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் போது உள்ளக கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | சபையின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வான்டிற்காக பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் ஆண்டின் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 8 வருமான விடயங்களில் 6 சதவீதம் முதல் 148 சதவீதம் வரையிலும் 7 செலவின விடயங்களில் 12 சதவீதம் முதல் 67 வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரசகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறையாக பாதீட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருடாந்த மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |